DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 19/2024** |
| Deposition of Witness for | : PW 8 |
| Name | : டாக்டர்.கந்தகுமார் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 19.05.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 19th **May** 2026.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. சாட்சி வீடியோ கான்பரன்சிங் மூலம் ஆஜராகி அளித்த சாட்சியம் பதிவுசெய்யப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது வள்ளியூரில் தனியார் ஸ்கேன் சென்டரில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 25.05.2015 ம் தேதி திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நுண்கதிர் பிரிவில் பணிபுரிந்த போது சண்முகையா என்ற 65 வயது மதிக்கத்தக்க ஆணின் நெஞ்சு பகுதிக்கு சிடி ஸ்கேன் எடுக்கப்பட்டது. அதை ஆய்வு செய்ததில், அவருக்கு வலது நுரையீரலை சுற்றி ரத்தம் ஒழுகி இருந்தது என்றும், வலது நுரையீரலின் அடிப்பகுதி சுருங்கி இருந்தது என்றும்

சான்றழித்தேன். இது பற்றி காவல் துறை ஆய்வாளர் என்னிடம் விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் முதல் விசாரணையில் கூறிய சான்றிதழை நான் போலீசாரிடம் நான் கொடுத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை. ஆனால் போலீசார் அந்த சான்றிதழை காயம்பட்ட நபரின் கேஸ் சீட்டிலிருந்து பெற்றிருக்க வாய்ப்புள்ளது. நான் முதல் விசாரணையில் கூறிய காயங்கள் அவருக்கு எப்போது ஏற்பட்டது என்று என்னால் கூறமுடியுமா என்றால் ஸ்கேன் எடுத்த நாளில்தான் அவரது வலது நுரையீரலில் நான் முதல்விசாரணையில் கூறிய மாற்றங்கள் காணப்பட்டன. மேற்கண்ட காயம் தொடர்பாக வெளிகாயம் எதுவும்நான் பார்த்தேனா என்றால் இல்லை. மேற்கண்ட காயத்தினால் வலி எதுவும் இருப்பதாக காயம்பட்ட நபர் கூறினாரா என்றால் நான் காயம்பட்ட நபருக்கு சிடி ஸ்கேன் எடுத்துக்கொடுத்தேன். நான் அவரை பரிசோதித்து அவரிடம் உரையாடவில்லை. நான் முதல் விசாரணையில் கூறிய நாள் மற்றும் நேரத்தில் காயம்பட்ட நபருக்கு சிடி ஸ்கேன் எடுக்கவில்லை என்றாலும், அது பொறுத்து எந்த சான்றும் வழங்கவில்லை என்றாலும், அவ்வாறு வழங்கியிருந்தால் அதை போலீசாரிடம் ஒப்படைத்திருப்பேன் என்றாலும், அவ்வாறு ஒப்படைக்காததால் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியவாறு காயம்பட்ட நபருக்கு நுரையீரலில் எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும், அதனால்தான் மருத்துவர் பரிசோதித்தபோது மேற்கண்ட காயம் பொருத்து அவர் எதுவும் கூறவில்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**